பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 06 புதன்கிழமை 21.12.2022 கதிர் 297

வெற்றிலைக்கேணிக் கடலில்

## தமிழக மீனவர்கள் 11 பேர் சிக்கினர்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வெற்றிலைக்கேணிக் கடற்பரப்புக்குள் நுழைந்த தமிழக மீனவர்கள் 11 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 2☞

## தேர்தலைப் பிற்போட அரசு கடும் பிரயத்தனம்

அங்கஜன் பகிரங்கக் குற்றச்சாட்டு



உள்ளூராட்சி சபைத் தேர்தலை இப்போதைக்கு நடத்தும் நிலைப்பாட்டில் அரசு இல்லை. அந்தத் தேர்தலைப் பிற்போடுவதற்குரிய வழிமுறைகளையே அரசு மேற்கொள்கின்றது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2☞

## மணிக்கு ஆப்பு; 'பட்ஜட்' தோல்வி



ஈ.பி.டி.பி. வெளிநடப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 7 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் இன்று மாநகர மேயர் 2☞



# எழிலன் எங்கே?

## இராணுவம் பதில் கூற வேண்டும்; இரா.சம்பந்தன் எம்.பி. வலியுறுத்து



இராணுவத்திடம் எழிலன் (சசிதரன்) சரணடைந்திருந்தால் அல்லது எழிலனை அவரது குடும்பத்தினர் இராணுவத்திடம் ஒப்படைந்திருந்தால் அல்லது அவரை இராணுவத்தினர் கைது செய்திருந்தால் அவருக்கு என்ன நடந்தது என்பதை இராணுவத்தினர் தெரிவிக்க வேண்டும். அது அவர்களின் கடமை. 8☞

## அடையாளம் காண முடியாதவாறு சிதைவடைந்த நிலையில் சடலம்

ஆழியவளையில் கரையொதுங்கியது

(இ.கலையமுதன்)

யாழ்., வடமராட்சி கிழக்கு – ஆழியவளை கடற்கரையில் ஆணின் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இன்று பிற்பகல் வேளையில் இந்தச் சடலம் கரையொதுங்கியுள்ளது.

சடலத்தின் தலைப்பகுதியில் மண்டையோடு மட்டுமே எஞ்சியுள்ளது. சடலம் அடையாளம் காண முடியாதவாறு சிதைவடைந்துள்ளது.

இந்நிலையில், இந்தச் சடலம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கூட்டமைப்பும் கூட்டணியும் இரட்டைக் குழல் துப்பாக்கி

மனோ அதிரடிக் கருத்து



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி, இரட்டைக் குழல் துப்பாக்கியாக இணைந்து செயற்படும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். 8☞

## வாய், கைகள் கட்டப்பட்ட நிலையில் கார் சாரதி ஒருவர் சடலமாக மீட்பு!

இரத்தினபுரி – கடகரெல்ல பாலத்துக்கு அருகில் கார் சாரதி ஒருவர் கைகள் மற்றும் வாய் துணியால்கட்டப்பட்டநிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று இங்கிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

48 வயதுடைய மினுவாங்கொடை, கல்லொழுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை – இரத்தினபுரி வீதியில்கடகரெல்லபாலத்துக்கு அருகில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் காணப்பட்டமை தொடர்பில் ஒருவர் இங்கிரிய பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து 2☞

வடக்கு விளையாட்டு விழாவில்

## முதலிடம் பெற்ற யாழ். மாவட்டம்

2022 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் யாழ்ப்பாணம் மாவட்டம் முதலிடத்தையும், முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் இடையே மாகாணமட்ட விளையாட்டுப்போட்டி துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

86 தங்கம், 59 வெள்ளி, 38 வெண்கலம் உள்ளடங்கலாக 183 பதக்கங்களைப் பெற்ற யாழ்ப்பாண மாவட்டம் 2☞

நத்தார், புத்தாண்டையொட்டி

## ஐந்து நாள்களுக்கு மின் தடை இல்லை



எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது என்று மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். 2☞

யாழ். பல்கலைக்கழகத்தில்

## பகிடிவதைக் குற்றச்சாட்டு: 16 மாணவர்களுக்குத் தடை

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புதிய கல்வி ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதாவது கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து இதுவரையான காலப் பகுதிக்குள் 2☞

## 223 பாடசாலைகளில் போதைப் பாவனை

மேல் மாகாணத்தில் மாத்திரம்

மேல் மாகாணத்தில் 223 பாடசாலைகளில் போதைப் பொருள் பாவனை இடம்பெறுகின்றது எனத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தத் தகவலின் அடிப்படையில் மேல் மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தால் ஒவ்வொரு பாடசாலைக்கும் போதைப் பொருள் தடுப்புப் பயிற்சித் 8☞

## தேர்தலைப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் குற்றம் சாட்டினார்.

யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட வலைப்பந்தாட்ட மைதானத்தைத் திறந்துவைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றுக்குக் காலம் இருக்கின்றபடியால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு வேண்டுகோளை நாங்கள் முன்வைக்க முடியாது. ஏனெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் யாப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துப் பெரும்பான்மையூடாக அவர் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவரது ஆட்சி நிறைவுறுவதற்கு இன்னும் இரண்டரை வருடங்கள் உள்ளன. அந்தக் காலம் முடிந்த பின்னர்தான் தேர்தல் வைக்க வேண்டும் என்பது சட்ட ரீதியாக இருக்கின்றது.

கால எல்லை முடிந்த பின்னர்தான் தேர்தல் வைக்க முடியும் என்று சட்டம் சொல்கின்றது.

அந்தக் கால எல்லை கடந்தும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. இது ஜனநாயக நாடு. எனவே, மக் களுடைய அபிப்பிராயங்களுக்குச் செவிசாய்த்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்.

உள்ளூராட்சி சாய்த்த தேர்தலை விரைவில் நடத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசை வற்புறுத்த வேண்டும் - என்றார்.

## மணிக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஸ்வலிங்கம் மணிவண்ணனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 11 வாக்குகளும், எதிராக 18 வாக்குகளும் பதிவாகின.

வாக்கெடுப்பின் போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) வெளிநடப்புச் செய்தது.

யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் இம்மானுவேல் ஆர்னோல்டின் 2021 ஆம் ஆண்டுக்கான இரண்டு வரவு - செலவுத் திட்டங்களும் தோற்கடிக்கப்பட்டமையால் புதிய மேயர் தெரிவு இடம்பெற்றது.

அதையடுத்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பூரண ஆதரவுடன் யாழ். மாநகர மேயராக மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, மேயர் மணி வண்ணனின் 2023 வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்தமையால் அது தோற்கடிக்கப்பட்டுள்ளது.

45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் யாழ். மாநகர சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 16 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் 13 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் 10 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 3 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஓர் உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## பகிடிவதை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

16 மாணவர்களுக்குப் பகிடிவதையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம், விஞ்ஞானபீடம் ஆகியவற்றில் தலா 4 மாணவர்களுக்கு ஆரம்பகட்ட விசாரணைகள் முடிவடையும் வரை பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்கேற்பதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதுடன் விடுதிகளிலிருந்து வெளியேறுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த 2 மாணவர்களுக்கும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கும் விடுதிகளில் தங்கியிருப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருப்பதுடன் உடனடியாக விடுதியிலிருந்தும் அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேநேரம், சேர்.பொன்.இராமநாதன் அரங்காற்றுகை மற்றும் கட்புலக்கலைகள் பீடத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் மீதான விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும், குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து அவர்களுக்கும் வகுப்புத்தடை உட்பட அனைத்துச் செயற்பாடுகளுக்குமான தடை விதிக்கப்படலாம் என்றும் அறிய வருகின்றது.

## முதலிடம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாம் இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டம் 42 தங்கம், 39 வெள்ளி, 42 வெண்கலப் பதக்கங்களுமாக மொத்தமாக 123 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மன்னார் மாவட்டம் 19 தங்கம், 16 வெள்ளி, 20 வெண்கலப் பதக்கங்களுடன் 55 பதக்கங்களைப் பெற்று மூன்றாம் இடத்தையும், வவுனியா மாவட்டம் 19 தங்கம், 12 வெள்ளி, 17 வெண்கலம் என 48 பதக்கங்களுடன் நான்காம் இடத்தையும், கிளிநொச்சி மாவட்டம் 14 தங்கம், 22 வெள்ளி, 30 வெண்கலம் என்று 66 பதக்கங்களைப் பெற்று 5ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.

## வாய், கைகள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வாடகை வாகனத்தில் சாரதியாகச் சென்ற தனது சகோதரர் தொடர்பில் எவ்வித தகவலும் இல்லை என உயிரிழந்தவரின் சகோதரர் மினுவாங்கொடைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து இங்கிரிய பொலிஸாரால் இனந்தெரியாத சடலம் ஒன்று இருப்பதாக முறைப்பாட்டாளருக்கு அறிவித்ததன் பேரில் ஹொரண வைத்தியசாலைக்குச் சென்ற அவரது சகோதரர் சடலத்தை அடையாளம்காட்டியுள்ள நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழக மீனவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இன்று அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணித்த படகையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். கைதான தமிழக மீனவர்கள் 11 பேரும் கைப்பற்றப்பட்ட படகுடன் மயிலிட்டித் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## ஐந்து நாள்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, டிசம்பர் 24, 25, 26, 31 மற்றும் ஜனவரி முதலாம் திகதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என்றுஅவர் கூறினார். எவ்வாறாயினும், இன்றும் நாளையும் 2 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின்வெட்டை அமுல்படுத்தப் பொதுப் பயன்பாடு ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

## 223 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபைமற்றும்பொலிஸ்போதைப்பொருள் தடுப்புப் பணியகம் என்பன மேல் மாகாணகல்வி அமைச்சின் அனுமதியுடன் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜனநாயகத்துக்குப் பெருமை

நடைபெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை தடுக்கும் எண்ணம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கோ அல்லது அவரது அரசுக்கோ இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தனவும் தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டார்.

கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத் தீர்மானங்களை நேற்று செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களுக்கு வெளியிட்ட போதே இதனை அவரை தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பில் ஜனாதிபதியினதும் அரசினதும் முடிவை அறிவித்தமை மட்டுமல்லாமல், அந்த முடிவில் ஜனாதிபதியும் அரசுத் தரப்பினரும் தீர்க்கமாக உள்ளனர் என்பதை உறுதிப்படுத்திக் காட்டுவதற்கு இன்னொரு விடயத்தையும் அவர் சுட்டிக் காட்டி உள்ளார்.

இந்தத் தேர்தலுக்கான ஆயத்த நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் ஐ.தே.கட்சியும் அவரது பிரதான கூட்டான பொதுஜன பெரமுனவும் ஈடுபட்டு, இந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்காக சுறுசுறுப்பு பணியை ஏற்கனவே ஆரம்பித்து விட்டன என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் நியமனங்களைப் பெறுவதற்கு விரும்புவோரிடமிருந்து இந்தக் கட்சிகள் விண்ணப்பங்களையும் கோரி இருக்கின்றன என்ற தகவலையும் அவர் வெளியிட்டார்.

அதாவது தேர்தலில் முழுமூச்சாக இறங்கும் நிலைப்பாட்டில் ஆளும் கட்சியினர், ஜனாதிபதி எல்லோரும் மும்மரமாக ஈடுபட்டிருக்கின்றமையால், தேர்தல் தள்ளிப் போவதற்கான வாய்ப்பு இல்லை என்பதுதான் அதன் கருத்து.

ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு இடம் அளிக்காமல் அதற்கு மாறான கருத்தை பிரதிபலித்து வந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அண்மைக்காலத்தில் அது குறித்து பகிரங்கக் கருத்து வெளிப்பாடுகளைத் தவிர்த்து, அமைதி பேணி வருகின்றார்.

இந்தத் தேர்தலை தடுக்கக்கூடிய சட்ட ரீதியான மார்க்கம் ஏதும் இல்லாத நிலையில், தமது கையை மீறிய சூழலில், வேறு வழியின்றி, தேர்தல் அறிவிக்கப்பட்டு நடத்தப்படுவதை விருப்பமின்றியே பார்த்திருக்க வேண்டிய கட்டாயத்துக்கு அவர் உள்ளாக்கப்பட்டு இருக்கலாம் என சில வட்டாரங்கள் கூறுகின்றன.

'எட்டாப் பழம் புளிக்கும்' என்பது போல, உள்ளூராட்சித் தேர்தலை முடக்க வழியில்லாத சூழலில், அதை நடத்துவதற்குத் தாம் எதிர்ப்பில்லை என்ற நிலைப்பாட்டை ஜனாதிபதி காட்டுகின்றாரோ என்னவோ....!

எதுவென்றாலும் ,இந்த உள்ளூராட்சித் தேர்தல் காலம் பிந்தாமல் நடத்தப்படுமானால், இது ஜனநாயகத்துக்குக் கிடைத்த ஒரு பெருமைதான்...!



## பாடசாலை செயற்பாட்டுகளுக்கு இடையூறாக உள்ள ஆசிரியரை மாற்றக்கோரி கிளிநொச்சியில் போராட்டம்!

பாடசாலை செயற்பாட்டுக்கு இடையூறாக உள்ள ஆசிரியரை மாற்றக் கோரி பாடசாலை சமூகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவர்கள், பெற்றோர் ஏற்பாடு செய்த போராட்டத்துக்கு ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

மேற்படி போராட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை பிரதான வாயிலை மூடி இடம்பெற்றது. இதன்போது, உள்ளே செல்ல விடாது மாணவர்கள் பிரதான வாயிலை மறித்து போராட்டதில் ஈடுபட்டனர்.

மேற்படி ஆசிரியர் பாடசாலைக்கு வருகை தந்த போது அமைதியின்மை ஏற்பட்டது. இந்த நிலையில் பாடசாலை முதல்வர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

தொடர்ந்து மேற்படி இடத்துக்கு பொலிஸார் வருகை தந்து, ஆசிரியரைப் பாதுகாப்பாக அழைத்து சென்று வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். பாடசாலை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள் எழுதுதல், முறையற்ற விடயங்களில் ஈடுபடுதல் என ஆசிரியர் தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

தொடர்ந்து, கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அமல்ராஜ் வருகை தந்து, அவரை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், பாடசாலை நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுக்குமாறும் பணித்தார்.

இந்த நிலையில் மீண்டும் எதிர்ப்பு எழுத்த நிலையில், பாடசாலை முதல்வர் பிரதான வாயிலை திறந்து மாணவர்களை உள்ளே செல்லுமாறு பணித்தார். அமைதியாக மாணவர்கள் உள்ளே சென்றனர்.

தொடர்ந்து, பாடசாலை சமூகத்துக்கும் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இன்று முதல் முதல் அமுலுக்கு வரும் வகையில் 5 அத்தியாவசிய பொருள்களின் விலை குறைப்பு!

எதிர்வரும் கிறிஸ்துமஸ் உள்ளிட்ட பண்டிகை காலத்தை முன்னிட்டு 5 அத்தியாவசிய பொருள்களின் விலையை குறைக்க லங்கா சதொச தீர்மானித்துள்ளது.

குறைக்கப்பட்ட விலைகள் டிசெம்பர் 21 முதல் அமுலுக்கு வரும் என லங்கா சதொசவின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி பெரிய வெங்காயம் 5 ரூபா குறைக்கப்பட்டு 185 ரூபாவாகவும் சிவப்பு பருப்பு 7 ரூபா குறைக்கப்பட்டு 378 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும்.

அத்தோடு ரின் மீன் 10 ரூபா குறைக்கப்பட்டு 480 ரூபாவாகவும் சிவப்பு மிளகாய் 15 ரூபா குறைக்கப்பட்டு 1780 ரூபாவாவும் நெத்தலி கருவாடு 50 ரூபாவால் குறைக்கப்பட்டு 1100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும்.

## அச்சுவேலி ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு சீன அரசின் அரிசிப் பொதிகள் வழங்கி வைப்பு!



யாழ்– அச்சுவேலி ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு சீன அரசாங்கத்தின் உதவி திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) பாடசாலை அதிபர் சிவலிங்கம் சதீஷ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது 10 கிலோ எடை உள்ள அரிசி பொதிகள் 270 மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வில்லிசைக் கலைஞர் விஜயநாதன் மரணம்!

ஈழத்தில்புகழ்பூத்தசின்னமணிவில்லிசைக் குழுவின் பிரதான பக்கபாட்டு நகைச்சுவை மற்றும் நகைச்சுவை நாடக கலைஞர் , அச்சுவேலி தபால் அலுவலக ஓய்வுநிலை உத்தியோகத்தர் அச்சுவேலியூர் அம்பிகாபதி விஜயநாதன் இறைபதமடைந்துள்ளார்.

அச்சுவேலியில் உள்ள அவருடைய வீட்டில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இறைபதமடைந்த விஜயநாதனின் இறுதிச் சடங்குகள் அன்னாருடைய இல்லத்தில் நேற்று இடம்பெற்றன.

அழிந்து வரும் தமிழர்களின் தொட்டுனர முடியாத மரபுரிமைகளினுள் ஒன்றான வில்லிசைக்கலையை நிலைநிறுத்திய கலைஞர்களுள் சின்னகலைவானர் சின்னமணியுடன் இணைந்து விஜயநாதன், ஈழத்திலும் புலம்பெயர் தேசத்திலும் பல அரங்குகள் மூலமாக மக்களின் மனம் கவர்ந்த கலைஞராகவும் நகைச்சுவையுடன் இணைந்து இலகுவாக சமூகத்துக்கு செய்தியை எடுத்து சொல்லும் கலைஞராகவும் நெறியாளர் ஆகவும் நாடகம் வில்லிசையென எண்ணிலடங்காத அரங்குகளில் தனது கலைத்திறனை வெளிப்படுத்தி இருந்தார்.



# கொரிய தீபகற்பத்தில் குவிந்தன அமெரிக்கா போர் விமானங்கள்!

## தென்கொரியாவுடனான கூட்டு பயிற்சிக்காக





சியோல், டிச.21

வடகொரியா தன்னிடம் இருக்கும் அணு ஆயுதங்களால் தென்கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. இதனால் அந்த இரு நாடுகளின் நெருங்கிய நட்பு நாடாக இருந்து வரும் அமெரிக்கா, அணு ஆயுதங்களை கைவிட வடகொரியாவுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது. இதன் காரணமாக வடகொரியாவுக்கும், அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் இடையே மோதல் நீடிக்கிறது.

இந்த நிலையில் தென்கொரியாவுடனான கூட்டு போர் பயிற்சிக்காக அமெரிக்கா அணு ஆயுதத் திறன் கொண்ட குண்டுவீச்சு விமானங்கள் உள்பட பல போர் விமானங்களை கொரியா தீபகற்பத்தில் குவித்துள்ளது.

தென்கொரியாவின் மேற்கு பகுதியில் கொரிய தீபகற்பத்தையொட்டி அமைந்துள்ள ஜெஜு தீவில் இருநாட்டு விமானப்படைகளின் கூட்டு போர் பயிற்சி நேற்று தொடங்கியதாகவும், இந்த வாரம் முழுவதும் பயிற்சி தொடரும் எனவும் தென்கொரியா இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தப் போர் பயிற்சியில் அமெரிக்காவின் யு.எஸ். பி-52 ரக குண்டு வீச்சு விமானங்களும், எவ் -22 ராக போர் விமானங்களும், தென்கொரியாவின் எவ்-35 மற்றும் எவ்-15 ரக விமானங்களும் பங்கேற்றுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் விமானப்படைகள் திடீரென கொரிய தீபகற்பத்தில் போர் பயிற்சியைத் தொடங்கியிருப்பது அங்கு பதற்றத்தை அதிகரித்துள்ளமையுடன் இதன் எதிரொலியாக வடகொரியா தனது ஏவுகணை சோதனையை வேகப்படுத்தும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானுக்கு மிரட்டல் விடுத்தது வடகொரியா; வலுவான இராணுவ நடவடிக்கைக்கு தயாராம்



பியாங்யாங், டிச.21

வடகொரியா தனது பிராந்திய எதிரி நாடான ஜப்பானை அச்சுறுத்தும் விதமாக அவ்வப்போது ஜப்பானை நோக்கி ஏவுகணைகளை ஏவி வருகிறது. இதனால்ப்இருநாடுகளுக்கு இடையில் தொடர்ந்து பதற்றம் நீடிக்கிறது. இந்தச் சூழலில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஜப்பான் தனது புதிய பாதுகாப்பு கொள்கையைப்வெளியிட்டது. இந்த கொள்கையின் கீழ் வடகொரியா மற்றும் சீனாவின் அச்சுறுத்தல்களுக்கு எதிராக தாக்குதல் திறனை அதிகரிக்க இராணுவச் செலவினங்களை இரட்டிப்பாக்குவதாக ஜப்பான் உறுதி அளித்துள்ளது.

இந்த நிலையில் ஜப்பானின் இந்த புதிய இராணுவ கொள்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள வடகொரியா ஜப்பானுக்கு எதிராக வலுவான இராணுவ நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் மிரட்டல் விடுத்துள்ளது. இது குறித்து வடகொரியா வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் – மற்ற நாடுகள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு எதிர் தாக்குதல் திறனை மேம்படுத்துவது, தற்காப்புடன் எந்தத்தொடர்பும்இல்லாதது.

தனது பேராசையைத் தீர்த்துக்கொள்வதற்கான ஜப்பானின் முட்டாள்தனமான முயற்சி இது. தற்காப்பு உரிமைகளை நியாயமான முறையில் செயல்படுத்துவது என்ற சாக்குப்போக்குடன் அதன் இராணுவப் படையெடுப்பு திறனைக் கட்டியெழுப்புவது நியாயப்படுத்தப்படவும், பொறுத்துக் கொள்ளவும் முடியாதது. ஜப்பானிய பாதுகாப்பு கொள்கையால் எழுந்துள்ள சிக்கலில் இருந்து வடகொரியாவின் இறையாண்மை மற்றும் தேசிய நலன்களைப் பாதுகாக்க தைரியமான மற்றும் வலுவான இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பல்கலைக்கழகங்களில் ஆப்கான் பெண்கள் படிப்பதற்குத் தடைவிதித்தனர் தலிபான்கள்!

காபூல், டிச.21


ஆப்கானிஸ்தானில் ஒரு ஆண்டுக்கும் மேலாக ஆட்சி செய்துவரும் தலிபான்கள் அந்நாட்டு மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். குறிப்பாக, அந்த நாட்டின் பெண்கள் பாலின பாகுபாட்டால் பல சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆறாம் வகுப்பு மேல் கல்வி கற்கத் தடை, ஆண்கள் துணையின்றி விமானங்களில் பயணிக்கத் தடை, பொது இடங்களில் ஆடைக் கட்டுப்பாடு, பொழுதுபோக்கு பூங்கா மற்றும் உடற்பயிற்சி கூடம் செல்லத் தடை என பெண்களுக்கு பல கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் பல்கலைக்கழகங்களில் பெண்கள் படிப்பதற்கு தலிபான்கள் இடைக்கால தடை விதித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் இந்த உத்தரவு செல்லுபடியாகும் என்றும், அடுத்த உத்தரவு வரும் வரையில் இது அமுலில் இருக்கும் எனவும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

## பாகிஸ்தான் சந்தையில் காஸ் சிலிண்டர்கள் வெடித்ததில் பன்னிருவர் உடல் கருகிப் பலி






இஸ்லாமாபாத், டிச.21

பாகிஸ்தானின் தென்மேற்கு மகாணமான பலுசிஸ்தானில் உள்ள லாஸ்பேலா நகரில் சந்தை ஒன்று உள்ளது. இங்கு ஏராளமான கடைகள் அமைந்துள்ள நிலையில் நேற்று இந்தச் சந்தை வழக்கம் போல் பரபரப்பாக இயங்கி கொண்டிருந்தது.

அப்போது அங்குள்ள ஒரு கடையில் வைக்கப்பட்டிருந்த காஸ் சிலிண்டர் திடீரென வெடித்துச் சிதறியது. இதில் கடையில் தீப்பற்றிய நிலையில் அங்கு வைக்கப்பட்டிருந்த மேலும் பல சிலிண்டர்கள் அடுத்தடுத்து வெடித்தன. இதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது. காஸ் சிலிண்டர்கள் வெடித்ததால் ஏற்பட்ட தீ அருகில் உள்ள மற்ற கடைகளுக்கும் பரவி கொழுந்துவிட்டு எரிந்தது. அதோடு சந்தையில் நிறுத்தப்பட்டிருந்த பத்திற்கும் அதிகமான வாகனங்களும் தீக்கிரையாகின. இந்த கோர விபத்தில் 12 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிப் பலியாகினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 25 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

# திருப்பதி உண்டியலில் நேற்று 5 கோடி முப்பது லட்சம் ரூபா!



திருப்பதி,டிச.21

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று ஒரே நாளில் ஐந்து கோடி முப்பது லட்சம் ரூபா உண்டியல் காணிக்கையாக கிடைத்துள்ளதாக திருப்பதி தேவஸ்தானம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்வதற்காக நாடு முழுவதிலும் இருந்து தினமும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இதனிடையே திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தரிசனத்திற்காக கூடுதல் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் இலவச தரிசனத்திற்கு பக்தர்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தனர். இந்த நிலையில் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று ஒரே நாளில் உண்டியல் காணிக்கையாக 5 கோடியே 30 லட்சம் ரூபா கிடைத்துள்ளதாக திருப்பதி தேவஸ்தானம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமாநிலங்களில் கடும் பனிப்பொழிவு பனிமூட்டத்தால் மோசமான விபத்துகள்



புதுடெல்லி,டிச.21

டெல்லி உள்ளிட்ட வடமாநிலங்களில் நிலவும் கடும் பனிப்பொழிவால் வாகன விபத்துகள் தொடர்கின்றன. நேற்று நடைபெற்ற விபத்துகளில் 3 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

டெல்லி, உத்தரபிரதேசம், பஞ்சாப், அரியானா, இமாசலபிரதேசம், ராஜஸ்தான் போன்ற வட மாநிலங்களில் கடந்த சில நாள்களாக காலையில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. இதனால் முன்னே செல்லும் வாகனங்கள் தெரியாமல் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். விபத்துகளும் தொடர்கதையாகி உள்ளன.

உத்தரபிரதேச மாநிலம் புலந்த்சார் மாவட்டம் குர்ஜா பகுதியில் மேம்பாலம் ஒன்றின் அருகில் சென்ற ஒரு லாரியின் டயர் ஒன்று திடீரென பஞ்சர் ஆனதால் அந்த லாரி கவிழ்ந்தது. அதன் மீது, பின்னால் வந்த பஸ் உள்ளிட்ட வாகனங்கள் அடுத்தடுத்து மோதின. இந்த விபத்தில் லாரி டிரைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த மற்றொருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

காாம்பி மாவட்டத்தில் பிரயாக்ராஜ்–கான்பூர் நெடுஞ்சாலையில் மோட்டார்சைக்கிளில் சென்ற இரு வாலிபர்கள் நின்றுகொண்டிருந்த ஒரு லாரி மீது மோதினர். இதில் அந்த வாலிபர்கள் ஒருவர் பலியானார். மற்றொருவர் கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### பள்ளி வான் விபத்து

ஹர்தோய் மாவட்டத்தில் சாலையில் சென்ற ஒரு மண் அள்ளும் எந்திரம் திடீரென திரும்பியது. அப்போது பின்னால் வந்த ஒரு பள்ளி வான் அதன் மீது மோதியது. அதில் வான் டிரைவரும், மாணவர்கள் 7 பேரும் காயமடைந்தனர். பாரபங்கி மாவட்டத்தில் அடர்த்தியான பனிமூட்டம் காரணமாக, சாலையில் நின்ற லாரி மீது வேகமாக வந்த ஒரு பஸ் மோதியது. பின்னர் அந்த பஸ் திசைமாறி, சாலையோரம் உள்ள மரத்தில் மோதியது. அதில் 7 பேர் காயமடைந்தனர். சீதாப்பூர் மாவட்டத்தில் சாலையோரம் நின்றுகொண்டிருந்த ஒரு லாரி மீது பின்னால் வந்த வான் மோதியது. அதில் வானில் பயணித்த 8 பேர் காயமடைந்தனர். அவர்களில் டிரைவர் உள்ளிட்ட 4 பேர் படுகாயம் அடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

### ரயில், விமான சேவை பாதிப்பு

வடமாநிலங்களில் அடுத்த 5 நாள்களுக்கு கடும் பனிப்பொழிவு தொடரும் என்று இந்திய வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ள நிலையில் நேற்று சில இடங்களில் ரயில்கள் தாமதமாக இயக்கப்பட்டன. சில விமான நிலையங்களில் விமான சேவைகளும் பாதிக்கப்பட்டன.



# நாடாளுமன்ற மோதலுக்கு மத்தியில் ஒரு மேசையில் தலைவர்கள் விருந்து

புதுடெல்லி,டிச.21

காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, நேற்று முன்தினம் ராஜஸ்தானில் பா.ஜ.க. பற்றி கூறிய விமர்சனம், மாநிலங்க ளவையிலும், மக்களவையிலும் நேற்று புயலை கிளப்பின. இதனால் காரசார மோதல்களுக்கு பஞ்சம் இல்லை. ஆனால் மற்றொரு புறம் ஒரு சுவாரசிய சம்பவமும் நாடாளுமன்றத்தில் நேற்று அரங்கேறியது. அடுத்த ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி நாடாளுமன்றத்தில் சிறப்பு சிறுதானிய விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விருந்தில் துணை ஜனாதிபதியும், மாநிலங்களவை தலைவருமான ஜெகதீப் தன்கர், பிரதமர் மோடி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், காங்கிரஸ் தலைவர் கார்கே உள்ளிட்ட தலைவர்கள் ஒன்றாக அமர்ந்து சிரித்துப்பேசியவாறு நவதானிய

உணவுகளை விரும்பி ருசித்து சாப்பிட்டனர். இது ஒரு மாறுபட்ட காட்சியாக அமைந்தது. இதையொட்டி பிரதமர் மோடி டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டார். அந்தப் பதிவில் அவர் கூறி இருந்ததாவது:– 2023 ஆம் ஆண்டினை நாம் சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாட தயாராகி வருகிறோம். இந்த தருணத்தில் நாடாளுமன்றத்தில் ருசிமிக்க மதிய உணவினை சாப்பிட்டோம். இதில் சிறுதானிய உணவுகள் பரிமாறப்பட்டன. இதில் கட்சி வித்தியாசமின்றி அனைவரும் ஒன்றாக கலந்து கொண்டமை பார்ப்பதற்கு நன்றாக இருந்தது. – இவ்வாறு அதில் பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். இதையொட்டிய படங்களையும் பிரதமர் மோடி டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

# பல்கலை வளாகத்தில் சிறுத்தை அட்டகாசம்

## திருப்பதியில் மாணவர் அச்சம்

திருப்பதி,டிச.21

திருப்பதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஷ்வரா கால்நடை பல்கலைக்கழக வளாகத்தில் சிறுத்தை அட்டகாசம் அதிகரித்துள்ளதால் மாணவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

திருப்பதியில் மலை அடிவாரத்தில் கால்நடை பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. இந்த பல்கலைக்கழகத்தில் வனவிலங்குகள் உலா வருவது சமீபகாலமாக அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் நேற்றிரவு சிறுத்தை ஒன்று, நாய் ஒன்றை வேட்டையாடி அதன் உடல் பாகங்களை பல்கலைகழக வளாகத்திற்குள் போட்டு சென்றுள்ளது.

சிறுத்தை நடமாட்டத்தால் தங்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கு முன்னர், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி கல்லூரி வளாகம் முன்பு மாணவ, மாணவியர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



# திருமலை இந்துக்கல்லூரியின் முத்தமிழ் விழாவில் கௌரவம்





(ஹஸ்பர்)

நேற்று முன்தினம் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் முத்தமிழ் விழாவில் தம்பலகாமம் பட்டிமேடு சிந்தாமணி பிள்ளையார் ஆலயம் ஆதீன கர்த்தா காளியப்பு சிவசுப்பிரமணியம் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டார்.

இவரது தந்தையாரான திருகோணமலை தம்பலகாமம்பட்டிமேட்டைச்சேர்ந்த அமரர் சுப்பிரமணியம் (உடையார்) காளியப்புவின் பெரும்பங்களிப்புடன் 1927 ஆம் ஆண்டு காளியப்பு மண்டபம் திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் அமைக்கப்பட்டது.

அவ்வேளை அப்பாடசாலையின் அனைத்து வகுப்புகளும் இவ் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றன.

அப்போது பணியில் இருந்த பிரித்தானிய அரசாங்கத்தை சேர்ந்த சேர். ஹோர்பேட் ஸ்டான்லியினால் காளியப்பு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

சுப்பிரமணியம் காளியப்பு அவர்கள் 1948 ஆம் ஆண்டு வரை தம்பலகாமம், கந்தளாய் பகுதியில் விவாகப் பதிவாளராக கடமையாற்றினார்.

அவரின் சமூக சேவையை நினைவு கூருமுகமாக மகன் காளியப்பு சிவசுப்பிரமணியம் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டார்.

# தென்கிழக்குப் பல்கலையில் உலக அரபு மொழி தின விழா



(நூருல் ஹுதா உமர்)

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தில் அரபு மொழி விசேடதுறை மாணவர்களின் ஏற்பாட்டில் உலக அரபு மொழி தின விழா நேற்று முன்தினம் டிசம்பர் 19ஆம் திகதி பீடத்தின் கேட்போர் கூடத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எஸ். எம். எம். மஸாஹிர் விசேட அதிதியாகவும், அரபு மொழிப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்யெக் ஏ.பி.எம். அலியார் பிரதம அதிதியாகவும், அரபு மொழித் துறைத் தலைவர் ஏ. ஸீ.எப். ஸாதிபா சிறப்புப் பேச்சாளராகவும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் பீடத்தின் ஏனைய சிரேஷ்ட விரிவுரையாளர்களும் உதவி விரிவுரையாளர்களும் உட்பட சுமார் ஐநூற்றிற்கும் மேற்பட்ட மணவர்களும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் பிரதம அதிதி மற்றும் சிறப்பு விருந்தினர்களின் உரைகள் நிகழ்த்தப்பட்டதன.

உலக அரபு மொழி தினத்தை முன்னிட்டு கடந்த 15ஆம் திகதி பீட மாணவர்களுக்கு மத்தியில் நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுடைய நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.அம் மாணவர்களுக்கான சான்றிதழ்களும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் அனுசரணையுடன் இந்நிகழ்வில் வழங்கிவைக்கப்பட்டதன. மேலும் நிகழ்ச்சிகள் யாவும் அரபு மொழியில் நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள தரம் ஐந்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களால் உலக அரபு மொழியை முன்னிட்டு வரையப்பட்ட ஆக்கங்கள் நிகழ்ச்சியின் மத்தியில் காட்சிப்படுத்தப்பட்டு அவர்களுக்கான திறமை சான்றிதழ்களும் பீடாதிபதியின் கரங்களால் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும். இந்நிகழ்வானது உலக அரபு மொழி தினத்தை கொண்டாடும் நிகழ்வாக மாத்திரமன்றி அரபு மொழியின் முக்கியத்துவம் மற்றும் அதன் தேவைப்பாட்டை உணர்த்தும் கருப்பொருளில் அமையப் பெற்ற ஓர் நிகழ்வென்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# புகழ்பெற்ற ஓவியர் பத்மவாசன் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம்





(வி.ரி.சகாதேவராஜா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அழைப்பில் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்திருக்கும் உலகப்புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் நேற்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தார்.

அவர் நேற்று கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக கட்புலகற்கைகள், தொழில்நுட்பத்துறை முதலான் வருட மாணவர்களுக்கு 'ஓவியங்கள் தொடர்பான அறிமுகம்' என்னும் தலைப்பில் கலந்துரையாடலுடனான பயிற்சி வகுப்பு நடத்தினார்.

இந்நிகழ்வில் விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி, கட்புலகற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சீவரெத்தினம் மற்றும் விரிவுரையாளர்கள், அம்பாறை மாவட்டச் செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜீ, கிழக்கு மாகாணபிராந்திய அலுவலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டர்.

# ஹெரோயினுடன் கைதான் பெண்ணுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை




(பறூக் சிஹான்)

ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குடும்ப பெண்ணிற்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதான குடும்ப பெண் தொடர்பிலான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்டது.

இதன் போது கைதான சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹெரோயின் போதைப் பொருளை தம் வசம் வைத்திருந்தவர் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்கிறார் எனவும், அத்துடன் சந்தேக நபர் குடும்ப பெண் எனவும், அவரது கணவன் நோயுற்ற நிலையில் காணப்படுகிறார் எனவும் பெண் பிள்ளைகள் பராயமடையாமல் உள்ள நிலைமைகளை மன்றிற்கு விண்ணப்பம் செய்திருந்தார்.

இதற்கமைய சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் சமர்ப்பணம் விண்ணப்பங்களை ஆராய்ந்து நீதிவான் சந்தேக நபருக்கு 9,999 ரூபா தண்டப்பணம் மற்றும் 1 வருடம் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

மேலும் குறித்த வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட குடும்ப பெண் 350 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர் ஈழத் தமிழ் உறவுகள் தமது உதவிகளை தாயகப் பிரதேசத்துக்கு நேரடியாக செய்யவேண்டும்!

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்க செயலாளர் ஹரிகரன் கோரிக்கை







எமது தமிழ் பிரதேசங்களிலிருந்து புலம்பெயர்தேசங்களில் வாழும் ஈழத் தமிழ் நன்கொடையாளர்கள் அங்கு வியர்வைசிந்தி உழைக்கின்ற பணங்களை, தம் உறவுகளின் உயிர்காப்புக்காக சுகாதாரத் துறைக்கு வழங்குகின்றபோது அதனை நேரடியாக எமது வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு ஆற்றவேண்டும்.

– இவ்வாறு தெரிவித்தார் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளர் லயன் சி.ஹரிகரன்.

கனடா தமிழ் காங்கிரஸ் அமைப்பின் ஊடாக ஒருகோடி ரூபா பெறுமதியிலான மருந்துகளை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சையாளர்களுக்காக வழங்கும் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுஜகன் அவர்கள் முதலில் ஊடகங்கள் ஊடாக விடுத்த கோரிக்கைக்கு அமைவாகத்தான் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் மருந்துத் தேவை – குறிப்பாக புற்றுநோயாளர்கள் படும் அவலம் – வைத்தியர்கள் படும் சிரமம் – உலகளவில் உணரப்பட்டது. அதற்காக எமது வைத்தியசாலை நோயாளர்கள் சார்பில் முதற்கண் அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

புலம் பெயர் எமது ஈழ உறவுகள் எமது நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாகப் பல்வேறுபட்ட உதவிகளை – பல கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உதவிகளை – வழங்குகின்றார்கள். அவர்கள் ஒட்டு மொத்தமாக 'இலங்கை மக்கள்' என்று உணர்ந்து வழங்கும்போது – அந்த மருந்துகள் இலங்கை முழுத் தீவுக்கும் என்று சுகாதார அமைச்சின் ஊடாக வழங்கும்போது – பாரிய நிதி உதவியை எமது ஈழத்தமிழ் உறவுகள் வழங்கியிருந்தாலும், அதில் சிறுதுளிதான் எமது வடக்குக் கிழக்கு தமிழ் பிரதேசங்களுக்கு – அதிலும் எமது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை போன்ற சிறிய வைத்தியசாலையாக இருந்து அளப்பெரும் நோயாளர் சேவை ஆற்றுகின்ற வைத்தியசாலைகளுக்கு – கிடைக்கின்றன. காரணம், புற்றுநோயாளர்களுக்கு என சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்படும் மருந்துகள் மஹரகம, காலி கராப்பிட்டிய, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை என்று பங்கீடு செய்கின்றபோது, வைத்தியசாலைகளில் பதிவாகின்ற நோயாளர்களின் தரவுகளின் அடிப்படையிலேயே மருந்துகள் பங்கீடு செய்யப்படுகின்றன. மஹரகம, கராப்பிட்டியவை விட தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் அனுமதித் தரவுகள் மிகவும் குறைவானவை. ஆனால், ஒட்டு மொத்த வடக்குக் கிழக்கு மக்களுக்கும் அதனையும் தாண்டி அநுராதபுரம், புத்தளம், சிலாபம் போன்ற பிரதேச நோயாளர்களும் இங்கு சிகிச்சைக்காக வருகின்றார்கள். ஆனால், அமைச்சின் ஊடாகக் கிடைக்கப்பெறுகின்ற மருந்துகள் எமக்குப் போதுமானவையாக இல்லை.

கனேடிய தமிழ் காங்கிரஸ் எமது ஈழத்தமிழர்களிடம் நடைபயணம் ஊடாகப் பெற்ற மருந்துகளை வடக்கு – கிழக்கு பகுதிகளுக்கு நேரடியாகத் தமது பிரதிநிதியாகிய சிவம் வேலாயுதத்தை அனுப்பி வழங்கியுள்ளமை மகிழ்வைத் தருகின்றது. அதற்காக அவர்கள் தென்னிலங்கையைக் கைவிடவில்லை. 6 வைத்தியசாலைகளுக்கு வழங்குகிறார்கள். அதில் பெரும்பான்மை மக்கள் வாழ்கின்ற தெற்கு, மேல் மாகாணங்களும் அடங்குகின்றன. இது பிரிவினையற்ற அவர்களின் பரந்துபட்ட சேவை நோக்கைக் காட்டுகின்றது.

ஆறு.திருமுருகன் ஐயா அவர்களின் வார்த்தைகள் சமூகத்தால் பெரிதும் மதிக்கப்படுபவை. காத்திரமானவை. அவற்றை உணர்ந்து தற்போது லயன்ஸ் கழகங்கள், றோட்டரிக் கழகங்கள், இந்து அமைப்புகள், தனிநபர்கள் எனப் பலரும் தம்மால் முடிந்த சேவைகளை நோயாளர்களுக்கு வழங்குகின்றன. இதேநேரம், இன்னொரு விடயத்தையும் இந்தக் கொடை வள்ளல்களும் புலம்பெயர் தேசத்தவர்களும் உணரவேண்டும். புற்றுநோயாளர்களுக்கு சத்திரசிகிச்சை, அவசர சிகிச்சை என்றால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக்கூடமும் அவசர சிகிச்சைப் பிரிவும்தான் சேவையாற்ற வேண்டும். ஆகவே, அந்தப் பிரிவுகளில் – அதுவும் சத்திரசிகிச்சைக் கூடத்தில் – ஒரு பிளாஸ்டர்கூட இல்லாத துர்ப்பாக்கிய நிலைமைகூடக் காணப்படுகின்றது.

தெற்கிலுள்ள தேசிய வைத்தியசாலை, போதனா வைத்தியசாலை, கொழும்பு றிஜ்வே சிறுவர் வைத்தியசாலைகளிலும்கூட பனடோல், பரசிற்றமோல், மெட்போமின், இன்சுலின் போன்ற மருந்துகள் இல்லை. அந்த வைத்தியசாலைகளும் நன்கொடையாளர்களை நம்பித்தான் வைத்தியசேவையை வழங்குகின்றார்கள். ஆனால், தெற்கில் எத்தனையோ மிகப்பெரும் கோடீஸ்வரர்கள், தொழிலதிபர்கள் உள்ளார்கள். அவர்கள் அந்தத் தேவையைத் தாராளமாகப் பூர்த்திசெய்வார்கள். ஆனால், எமது வடக்குக் கிழக்கில் அவ்வாறில்லை. எமக்கு பெருமளவில் உதவக்கூடிய கொடையாளர்கள் எமது புலம்பெயர் தேசத்தவர்கள் மட்டுமே. அவர்கள்தான் எமது மக்களின் உயிர்காக்கும் உன்னத பணியை ஆற்றவேண்டும். – என்றார்.

வைத்தியசாலை திட்டமிடல் மருத்துவ உத்தியோகத்தர் வைத்தியர் ஜதுனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கனடா தமிழ் காங்கிரஸ் பிரதிநிதி சிவம் வேலாயுதம், சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வைத்தியகலாநிதி சுரேந்திரகுமார் ஆகிளோர் கலந்துகொண்டனர்.

## மாணவர்களுக்கான ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில் விண்ணப்பம்கோரல் வெள்ளியுடன் முடிவுக்குவருகிறது!

கடந்த 2021 (2022) ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றி பரீட்சையில் சித்தியடைந்து 2024 ஆம் ஆண்டு க.பொ.த உயர் தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடைய, பெருளாதாரப் பிரச்சினையுடைய மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தால் புலமைப்பரிசில் வழங்கும் வேலைதிட்டத்துக்காகக் கோரப்பட்டிருந்த விண்ணப்பங்களுக்கான இறுதி திகதி டிசெம்பர் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வருகிறது.

இதற்காக விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் மேற்படி விண்ணப்பப்படிவத்தை தமது அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், குடும்ப பொருளாதார நிலைமை தொடர்பாகக் கிராம உத்தியோகத்தரின் சிபாரிசுக் கடிதம் ஆகியவற்றுடன், 2022-12-23 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

பின்னர் இந்த விண்ணப்பம் பாடசாலை அதிபர் மூலமாக வலயக் கல்வி அலுவலகத்துக்கூடாக ஜனாதிபதி அலுவலகத்திடம் கையளிக்கப்பட வேண்டும்.

எனினும் விண்ணப்பம் கையளிக்கப்பட வேண்டிய முறை தொடர்பில் முறையான தெளிவின்மைக் காரணமாக பெரும் எண்ணிக்கையான விண்ணப்பங்கள் நேரடியாகவே ஜனாதிபதி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

எனவே காலதாமதமின்றி புலமைப்பரிசில் வழங்கும் இந்த வேலைத் திட்டத்தை முறையாக முன்னெடுப்பதற்காக, அனைத்து விண்ணப்பங்களையும் பாடசாலை அதிபரிடம் கையளிக்குமாறு நாம் விண்ணப்பதாரிகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் விண்ணப்பதாரிகள் அரசாங்க அல்லது எவ்வித கட்டணமும் அறவிடப்படாத தனியார் பாடசாலைகளில் கல்வி கற்பவர்களாகவும் அவர்களது மாதாந்தக் குடும்பவருமானம் ரூ.75 ஆயிரம் ரூபாவை அண்மிக்காத வகையிலும் இருப்பது அவசியமாகும்.

அத்துடன் விண்ணப்பதாரர்கள் கடந்த 2021 (2022) ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் முதற்தடவையாக தோற்றி 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த. உர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான முழுமையான தகைமையைக் கொண்டிருப்பதும் கட்டாயமாகும்.

ஒவ்வொரு கல்வி வலயத்திலுமுள்ள 30 மாணவர்களுக்கு இந்தப் புலமைப்பரிசில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை, அவர்களுக்காக மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் 24 மாதங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடதக்கது.

## இரண்டாம் மொழி கற்கையை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்!





இந்து பௌத்த கலாசார பேரவையால் நடத்தப்பட்டு வருகிற இலவச இரண்டாம் மொழி சிங்கள கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றுள்ளது

நேற்று (செவ்வாய்க்கிழமை) இந்து பௌத்த பேரவையின் பொதுச்செயலாளர் தேசமாணிய எம்.டி.எஸ். இராமச்சந்திரன் தலைமையில் யாழ்.வட மாகாண இந்து பௌத்த பேரவை தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றறு.

இந்த நிகழ்வில் இரண்டாம் மொழி கற்கை பூர்த்தி செய்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராஜா ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கும்புறுமூலையில் தோட்டத்தின் நீர்க்குழியில் விழுந்தவர் மரணம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புறுமூலை பகுதியில் இன்று புதன்கிழமை காலை நீர்க்குழி ஒன்றில் விழுந்து நபரொருவர் மரணமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டம் ஒன்றில் வெட்டப்பட்டிருந்த நீர் குழி ஒன்றில் தவறி விழுந்தது அந் நபர் மரணமடைந்துள்ளார் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு மரணமடைந்த நபர் கும்புறுமூலை பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய உதிஸ்கரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணமடைந்த நபரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதாரவைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கூட்டமைப்பும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பு பேரவை நியமனங்களில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே மனோ கணேசன் எம்.பி. இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசமைப்பு பேரவையில் நியமிக்கப்படவுள்ள ஏழு எம்.பிக்களுக்கான நியமனங்களில், ஐந்து சிங்கள எம்.பிக்களும், ஒரு முஸ்லிம் எம்.பியும் இப்போது பெயரிடப்பட்டுள்ளார்கள். இறுதி ஏழாவது எம்.பியாக ஒரு தமிழ் எம்.பி. இருக்க வேண்டும் என்பது மிக, மிக நியாயமான ஒரு எதிர்பார்ப்பு.

ஆனால், இதையும்கூட தட்டிப் பறிக்க உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோரின் 'உத்தர சபை' கட்சி முயல்கின்றது. அந்த நியமனம் உதய கம்மன்பில எம்.பிக்கு வழங்க வேண்டும் என அந்தக் கட்சி பிடிவாதம் பிடிக்கின்றது.

இது உச்சக்கட்ட பெரும்பான்மை வாதம். திருத்த முடியாத திமிர்வாதம். இதை எதிர்த்து முறியடிப்பதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி, இரட்டைக் குழல் துப்பாக்கியாக இணைந்து செயற்படும்.

அரசமைப்பு பேரவையில் சட்டப்படி பத்து உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். அதில் ஏழு எம்.பிக்களும், மூன்று சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் இடம் பெற வேண்டும்.

இந்த 7 எம்.பிக்களில், நான்கு சிங்கள எம்.பிக்களும், தலா ஒரு எம்.பியாக மூன்று எம்.பிக்கள், வடக்கு -கிழக்கு தமிழர், முஸ்லிம்கள், இலங்கை இந்தியதமிழர் ஆகியோரைப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். இதுவே நியாயமான நடவடிக்கை. ஆனால், இது நடைபெறவில்லை.

சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூவரும் தம் பதவி நிலை காரணமாக அரசமைப்பு பேரவையில் இடம்பெறுகின்றார்கள். ஜனாதிபதியும், எதிர்க்கட்சித்தலைவரும் தம் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். இதன்படி ரணில் விக்கிரமசிங்க, தமது பிரதிநிதியாக எம்.பி. நிமல் சிறிபால சில்வாவையும், சஜித் பிரேமதாஸ தமது பிரதிநிதியாக எம்.பி. கபீர் ஹாசீமையும் நியமித்துள்ளனர்.

அரசு, பிரதான எதிர்க்கட்சி ஆகிய கட்சிகளைச் சாராத சிறுகட்சிகளின் பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பது சட்டம். அதன்படி, எம்.பி. சித்தார்த்தனின் பெயரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேரித்துள்ளது. இப்போது இதுவே பிரச்சினையாக மாறியுள்ளது.

'மொட்டு' கூட்டணியில் தெரிவாகி விட்டு, அரசின் எல்லாத்தவறுகளுக்கும் காரணமாகி விட்டு, இப்போது எதிர்க்கட்சி பக்கத்தில் வந்து உட்கார்ந்துள்ள உதய கம்மன்பில, விமல் வீரவன்ச கும்பல், இதையும் தட்டிப் பறிக்கப் பார்க்கின்றது.

உண்மையில், இந்த விவகாரத்தில் மலையக இந்திய வம்சாவளி தமிழரே முதலில், அநீதிக்கு உள்ளாக்கப்பட்டார்கள். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம், அவர்கள் நியமிக்கும் எம்.பியாக இந்திய வம்சாவளி தமிழரைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு எம்.பியை நியமிக்கும்படி, நானும், எம்.பி. பழனி திகாம்பரமும் கோரிக்கை விடுத்தோம்.

தான் ஏற்கனவே, எம்.பி. நிமல் சிறிபால சில்வாவைப் பெயரிட்டு விட்டதாகவும், முதலிலேயே கூறி இருந்தால், பரிசீலிக்க இடமிருந்தது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் கூறினார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பி. ஒருவரைத் தமது பிரதிநிதியாக நியமிக்க முதலில் எம்மிடம் உடன்பட, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிறகு தமது கட்சியில் இருந்து, எம்.பி. கபீர் ஹாசீமை நியமிக்க வேண்டிய கட்டாயம் தனக்கு உள்ளது எனக் கூறினார். எம்.பி. கபீர் ஹாசீம் சகோதர முஸ்லிம் எம்.பி. என்பதால் அதை நாம் புரிந்துகொண்டோம்.

இந்நிலையில், மூன்று சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களில் ஒருவர், கட்டாயம் மலையக இந்திய வம்சாவளி தமிழராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும், அதற்கான பெயரையும் நாம், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பாக, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரிடம் சிபாரிசு செய்து வழங்கியுள்ளோம்.

இத்தகைய பின்னணியில், இறுதியான ஒரேயொரு எம்.பி. நியமனத்தில், எம்.பி. சித்தார்த்தனின் பெயரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிபாரிசு செய்துள்ளது. அது சட்டப்படியும், அரசியல் நியாயப்படியும் சரியானது. ஆகவே, அதை நாமும் ஆதரிக்கின்றோம். இதையே இன்று பிரச்சினைக்கு உள்ளாக்கி, அதையும் தட்டிப்பறித்து, ஈழத்தமிழ், மலையக தமிழ் என்ற பேதமில்லாமல் ஒருதமிழ்எம்.பி. கூட அரசமைப்புபேரவையில் இடம்பெற முடியாத நிலைமையை இனவாதிகள் ஏற்படுத்த முயல்கின்றார்கள் – என்றார்.



# யாழ். பொது நூலகத்தில் மேலதிகமாகக் காணப்படும் புத்தகங்கள் வடக்கிலுள்ள ஏனைய நூலகங்களுக்கு!

யாழ்.மாநகர சபையின் பொது நூலகத்தில் மேலதிகமாகக் காணப்படும் புதிய புத்தகங்களை வடமாகாண ரீதியில் நூலகங்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ்.மாநகர சபை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபை பொது நூலகத்தில் காணப்படும் மேலதிகமான புதிய புத்தகங்களை ஏனைய நூலகங்களின் பயன்பாட்டுக்கு வழங்குவது தொடர்பில் பிரேரணை ஒன்று மாநகர சபை முதல்வரால் முன்மொழியப்பட்டு அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்தச் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக 17 பாடசாலை நூலகங்கள் மற்றும் 14 பிரதேச சபைக்குரிய 31 நூலகங்களுக்கு பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணனால் வழங்கப்பட்டன.

எதிர்வரும் காலங்களிலும் புத்தகங்கள் தேவைப்படும் நூலகங்கள் அதற்கான கோரிக்கைக் கடிதங்களை வழங்கும் பட்சத்தில் அந்த நூலகங்களுக்கும் புத்தகங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் உறுதியளித்தார்.

யாழ்.பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், பொது நூலகப் பிரதம நூலகர், பாடசாலை, பிரதேச சபைகளின் நூலகர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# சீனாவின் 10 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி நன்கொடையின் இறுதி பொதி கொழும்பிற்கு!

இலங்கைக்கு வழங்கப்பட்ட 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி நன்கொடை, நிறைவடைந்துள்ளது என இலங்கைக்கான சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

அந்த அரிசி கையிருப்பில் உள்ள கடைசி 1000 மெற்றிக் தொன் அரிசி திங்கட்கிழமை இலங்கைக்கு வழங்கப்பட்டதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியின் மூலம் 7 ஆயிரத்து 900 பாடசாலைகளில் உள்ள 10 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள் என சீன தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## எழிலன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனை நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் அல்லது அவருக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று இராணுவத்துக்கு வவுனியா மேல் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு தொடர்பில் கருத்துரைக்கும் போதே கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அல்லது சரணடைந்திருந்த பின்னர் அல்லது கைது செய்யப்பட்ட பின்னர் எழிலன் காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவருக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டியதும் இராணுவத்தினரின் கடமைப்பாடு.

அதுதொடர்பில் போதிய விளக்கத்தை இராணுவத்தினர் நீதிமன்றத்திடம் முன்வைக்க வேண்டும். அந்தக் கடமையிலிருந்து இராணுவத்தினர் ஒருபோதும் விலக முடியாது – என்றார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2022 இல் வெளியிடப்பெற்றது.